விட்டார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அவமானம் இது மேலும் என்னுடைய தொகுதியில் எல்லா இடங்களிலும் கட்சிக் கொடிகளை அங்காடிகளில் கட்டி அதை ஒரு கட்சி விழாவாகவே நடத்தினார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதுபோன்று இனிமேல் செய்யாமல் இருக்க ......(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டுக் கொள்கிறீர்கள். (குறுக்கீடு) அது அவைக்குத் தெரியும். தேவைப்படுகின்ற போது பதில் சொல்வார்கள். இதைக் கவன ஈர்ப்பாகவே சிலபேர் கொடுத்து இருக்கிறார்கள். அதுபற்றி வரும்போது கூட விரிவாகப் பேசலாம், உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மேலும் அந்த அரிசி வழங்குவதில், 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கெல்லாம் அரிசி வழங்கப்படும் என்று சொன்னார்கள். 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்கள்....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்தின் மீது இது விவாதிக்கப்படவிருக்கிறது. அப்போது நீண்ட நேரம் பேசலாம். உறுப்பினர் குளித்துவிட்டு வந்தே பேசலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணவு மானியத்தின் மீது பேசும்போது தன்னுடைய உணர்வை முழுமையாகக் காட்டி பேசுமாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்போது திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவார்.

(இ) இலங்கைப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க இருப்பதாக வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயலுக்கும் இடிக்கும் இடையில் நான் ஒரு இனிப்பான செய்தி வைத்திருக்கிறேன். உலக தமிழ் சமுதாயத்தின் இதயத்தை இறுக்கி நெஞ்சத்தை உலுக்கிக் கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்கிற நம்பிக்கையொளி நேற்றைய முன்தினம் பிறந்திருக்கிறது. இலங்கையிலே போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இலங்கையினுடைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண முன்வந்திருப்பது நிச்சயமாக தமிழ்த்தாயின் கண்ணீரைத் துடைக்கும் புதிய முயற்சி என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம். இந்த மிகப் பெரிய தடைகளையும் சிக்கல்களையும் கடந்து பேச்சு வார்த்தை மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நிலையை உருவாக்கிய மூன்று பெருமைமிகு இந்தியர்களை

நாம் நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம் மிகுந்த எச்சரிக்கையோடும் மனிதாபிமானத்தோடும் அரசியல் சாதுரியத்தோடும் இலங்கைத் தமிழர்களின் இன்னல் காத்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தப் பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் அரசியல் எதிர்ப்புகளுக்கு அப்பாற்பட்டு, பாரதப் பிரதமரோடு இணைந்து நின்ற முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், சிறப்பாக அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு குறுகிய அரசியல் வட்டத்திற்குள் நில்லாமல் மிகுந்த தொலை நோக்கோடு மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தார்மீக ஆதரவு தந்து இந்தச் சூழ்நிலையை உருவாக்கிய தமிழகத்தினுடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த மூன்று இந்தியப்பெருங்குடி மக்களையும் தமிழ்ச் சமுதாயம் நன்றியோடு நினைத்துக் கொள்ளும். நன்றியோடு நினைத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பேச்சு வார்த்தை நல்லமுறையில் நடந்து வெற்றியடைய வேண்டுமென்று இந்த அவை தங்கள் மூலமாக இலங்கையினுடைய ஜனாதிபதிக்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் ஒரு வாழ்த்துச் செய்தியை உங்கள் மூலமாக அனுப்ப முடியுமா என்கிற கோரிக்கையை எங்கள் சார்பாக உங்கள் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக இணைத்து நன்றி தெரிவித்ததற்கும், வாழ்த்துத் தெரிவித்ததற்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, தங்கள் கோரிக்கையை இந்த அவை கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து ஏற்கெனவே நாம் முடிவெடுத்தபடி காலையிலும் மாலையிலுல் நாம் சட்ட மன்றத்தில் இருக்கப் போகிறோம் என்பதை நான் உங்களுக்கு கவனமூட்டவேண்டும். எனவே இப்போது நேரடியாக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படும்.

(4) கவன ஈர்ப்பு.

(அ) தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியிலுள்ள ''தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை'' மூடப்பெற்றிருப்பது குறித்து.

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே; ''தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம்பட்டியில் உள்ள தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு முதல் மூடிக்கிடப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.